2024 ஜூன் 27]

அமைப்பதற்கும், அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய மற்றோர் இடத்திலும் முறையான மின்சாரம் தடையின்றி வழங்குவதற்கான ஏனைய ஏற்பாடுகளையும் மின்சார வாரியம் நிச்சயமாகச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

105—

கயிறு தொழில்

***38182—திரு. எம்.ஆர். காந்தி:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கயிறு தொழிலை ஊக்குவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தினமாகக் கொண்டாடப்படுகிற இந்த நன்னாளில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பு அளிப்பதிலும் பெரும் பங்காற்றி வருகிற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும், தொழில்முனைவோர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 25,000 ஹெக்டேர் பரப்பில் ஆண்டிற்கு சுமார் 25 கோடி அளவிற்கு தேங்காய் சாகுபடி செய்யப்படுகிறது. தேங்காய் மட்டையிலிருந்து தென்னை நார், கயிறு பித், மதிப்புக் கூட்டப்பட்ட கயிறு பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இம்மாவட்டத்தில் சுமார் 300 தென்னை நார் சார்ந்த தொழில் நிறுவனங்கள் இயங்கி

வருகின்றன. இந்நிறுவனங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 25,000-க்கும் மேற்பட்டவர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு, வேலைவாய்ப்பை வழங்கி வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் விளையும் தேங்காய் மட்டையிலிருந்து தரமான நார் உற்பத்தி செய்யப்படுவதால் இதனைக் கொண்டு நவீன இயந்திரங்கள் மூலமாக மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்ய புதிதாக குறுங் குழுமங்கள் அமைக்கும் முயற்சிகள் தற்போது அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முற்பகல் 9-45

ஆர்வமுள்ள 20 தொழில்முனைவோர்கள் ஒன்றுசேர்ந்து கயிறு குழுமம் அமைக்க முன்வரும்பட்சத்தில், தகுதியின் அடிப்படையில், குறுங்குழுமங்களுக்கு அனுமதியளிக்க உதவி செய்யப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரத்யேகமாகத் தயாரிக்கப்படும் பிரஸ்டில் தென்னை நாருக்கான புவிசார் குறியீடு, G.I. பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு கன்னியாகுமரி மாவட்டத்திலே கயிறு தொழிலை ஊக்குவிக்க அனைத்து நடவடிக்கைகளும் அரசு எடுத்து வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாமன்ற உறுப்பினர் அவையில் இல்லையென்றாலும் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி, இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

106—

பேருந்து வசதி

***125718—திரு. சா. மாங்குடி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடியிலிருந்து சென்னைக்கு படுக்கை வசதியுடன்கூடிய புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?